
# கற்பகம்



'சாவின் நினைவு இருக்கட்டும்'
கதையின் படம் அட்டையை அலங்கரிக்கிறது.

மாசி 1990.

விலை ரூ. 4-00

# கற்பகம்

மாசி

1990

*மலர் — 11*

*இதழ் — 2*

வெளியீடு:

வடமாகாண
தெ.ப.பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்,
330, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 22713

*ஆசிரியர்:*

கே.வி.நடராஜன்

*அச்சாளர்கள்:*

உமா பிறிண்டேர்ஸ்
32,
*நல்லூர் குறுக்கு வீதி*
*நல்லூர்.*


# சங்கங்களும் சம்பள உயர்வும்.

அரச ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு ரூபா 200/- பல தனியார்துறை, கூட்டுறவு, கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கட்கு இன்னமும் அவ்வப்பகுதியினர் மனமுவந்து வழங்க முன்வராத வேளையில்-

எமது தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களில் சில தமது பணியாளர்களுக்கு மனமொப்பி தை மாத நிலுவையுடன் மாசி மாதத்திலிருந்து வழங்க நடவடிக்கை எடுத்து வருவதான செய்தி மகிழ்ச்சிக்குரியதாகும்

இவ்வகையில் சாவகச்சேரி, பருத்தித்துறை, அரியாலை, கோப்பாய் ஆகிய சங்கங்கள் இன்றைய நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமான பொருட்களின் விலைவாசி அதிகரிப்பை உத்தேசித்து - இந்த ஊழியர்களுக்கும் வாயும் வயிறும் உண்டென்று கண்டு, உடனடியாக சம்பள உயர்வை வழங்க எடுத்திருக்கும் முன்நடவடிக்கை இச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களது உற்சாகத்தை வெகுவாகப் பெருக்கி இருப்பதுடன் சங்கங்களின் நிர்வாகத்தை இப்போதிருந்தே பாராட்டச் செய்வதையும் கேட்கக்கூடியதாக உள்ளது

இருந்தாலும் பொதுவான அபிப்பிராயப்படி யானைப்பசிக்கு சோளப்பொரி தீனி போட்டதான அரசாங்கத்தின் இந்தக் கிள்ளித் தெளிப்பு வானளாவ உயர்ந்துவிட்ட இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு எந்த மூலைக்குப் போதப்போகுது என்ற துயரப் பெருமூச்சின் மத்தியில்-

இதுவாவது உரிய வேளையில் கிடைத்தால்-கிடைக்குமா? என்ற பலரினது சந்தேகத்தின் மத்தியில்-கிடைத்தால் வாழ்க்கைச் செலவின் மூச்சுத் திணறலை ஓரளவிற்காவது சமாளித்துக்கொள்ளலாமே என்ற நம்பிக்கை முன் குறிப்பிட்டதுறைகளில் கடமைபுரியும் பிரகிருதிகளுக்கு ஏற்படுவது இயல்பானதே

இன்னொன்றையும் இங்கு நாம் கவனித்தல் வேண்டும். தை மாதத்திலிருந்து வழங்கப்பட வேண்டுமென்ற இந்தச் சம்பள உயர்வு நிதி நிலமை சரியில்லாத காரணத்தினால் உடனடியாக வழங்கப்படாத விட்டது நான்கு மாதங்கள் கழித்து வழங்கப்படுவதாக வைத்துக் கொண்டாலும், சென்று போன நான்கு மாத நிலுவையும்(அரியசும்) சேர்த்து பின்பு வழங்கப்படுமா என்பதும் இந்தத் தனியார், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பெரும்பாலும் கிடைப்பதும் சந்தேகமே

ஆனால் இப்படிச் செய்யலாமே என்பது இன்றைய நிலையில் நிதி நிலைமைசரியில்லாத மேற்படி துறைகளை சார்ந்தவர்களது கோரிக்கை. அதாவது வழங்கப்படாத மாதங்களுக்குரிய சம்பள நிலுவையை (அரியஸ்) செல்மதியாகக் காட்டி நிதி நிலமை சீராகி தாபனம் இலாபத்தில் இயங்கும் வேளையில் வழங்கலாமல்லவா? என்பதாகும்

கோரிக்கையும் யோசனையும் ஞாயமானதும் வரவேற்கக்கூடியதும்தான் ஆனால் நிர்வாகங்கள் பெருந்தன்மையுடனும் மனிதாபிமானத்துடனும் இதனை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டுமே.

# சர்வதேச மகளிர் தினம்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் அதன் இதர அங்கங்களும் உலகத்தில்சமாதானத்தைமட்டும் நிலைநாட்டுவதற்காக செயலாற்றவில்லை. மனித இனத்தை சமூக சூழல்களையும், பசி, பிணி அறியாமை போன்ற குறைபாடுகளையும் நிவிர்த்திசெய்யமுற்படுகிறது. இவ்வாறான முயற்சியில் சிறுபிள்ளைகள் அங்கவீனமுற்றோர், வயோதிபர், விடற்றோர் போன்றவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பலவழிகளை மேற்கொள்கிறது. இதில் ஒருவழி குறிப்பிட்ட தினத்தை ஒதுக்கி அன்று உலக மக்கள் அரசாங்கங்கள் யாவரையும்அந்தபிரச்சினையைதீர்ப்பதற்கு தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்த இந்த ஐ. நா. ஸ்தாபனம் வழிவகுக்கும். எனவே தான் சுற்றுடல் தினம், மரம் நாட்டு விழா, போசாக்குத் தினம் என்று ஒருநாளைக்குறித்து அன்று உலக அரசாங்கங்கள். மக்கள் ஆகிய சகலரும் இந்த பிரச்சினையின் தன்மையை யுணர்ந்து அதை நிவர்த்தி செய்ய ஏகோபித்து முற்படுவர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 8-ம்திகதி சர்வதேச பெண்கள் தினம் என்று ஐ. நா, வால் பிரகடனப்படுத் தப்பட்டது. உலக நாடெங்கிலும் அரசும் மக்கள் நிறுவனங்களும் இந்த நாளை பெண்களின் நிலையைப் பற்றி உணரவும் அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்யவும் முற்படும்.

கீழைத்தேசங்களிலும் ஆபிரிக்கா, தென்அமெரிக்க நாடுகளிலும் தற்போது கூட பெண்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். வீட்டுவேலை செய்வது, பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது, கணவனுக்குப் பணிவிடை செய்வது கணவனுடைய பெற்றோருக்கு உதவிசெய்தல், வேறு வீட்டிலுள்ள வயோதிபர்களைப் பராமரித்தல் போன்ற வேலைகளோடு கணவனுடன் தோட்டத்திலோ, வயலிலோ தானும்

சீ. எஸ். சுப்பிரமணியம் ஜே. பி.

(அகில இலங்கை)

வடபிராந்திய ஆணையாளர் — சென்யோன் அம்புலன்ஸ் சங்கம்.

(இலங்கை)

சேர்ந்து உழைப்பது போன்ற பல வேலைகளை பெண்களே செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. சில கிராமங்களில் வீட்டின் சகல தேவைகளுக்கும் பல மைல் தூரம் பெண்களே சென்று தண்ணீரை தலையில் சுமந்து வருவார்கள். அவ்வாறு செல்லும்போது கைக் குழந்தையை தனது முதுகில் கட்டி தூக்கிச்செல்வார்கள்.

இவைகளை விட துணிகளைத் துவைத்தல், சமைத்தல், கழுவுதல், விறகு வெட்டுதல் தேடுதல், துணி தைசவு செய்தல், தமது தேவைக்கு பாத்திரங்களைச் செய்தல் போன்ற சகல வேலைகளையும் பெண்களே செய்ய வேண்

டும் என்று சமூகங்களில் விதிக் கப்பட்டுள்ளது.

பெண்களை ஒதுக்கிவைத்து அவர் களுடைய விருப்பு வெறுப்புக் களைக் கவனியாது அவர்களை ஒரு சாதாரண குழந்தை உற்பத்தி செய்யும் இயந்திரமாக ஆண்கள் தொன்றுதொட்டு நடத்தி வரு கிறுர்கள். இதே ஆபிரிக்க, இலத் தீன் அமெரிக்க நாடுகளில் பெண் களுக்குக் கல்வி புகட்டுவதில்லை. பாடசாலைகளுக்குச் செல்ல அனு மதிப்பதில்லை. தாய் என்ற ஸ்தா னத்துக்கும் மனைவி என்ற ஸ்தா னத்திற்கும் ஒரு மதிப்பு இல்லா மல் இந்த இரு நிலையிலும் அவர் கள் செய்யவேண்டியது எல்லாம் தியாகமே. உணவு மிஞ்சினுல் தான் அவர்கள் உண்பார்கள். அவர்களுக்கு போசாக்கு உணவு கிட்டுவதில்லை. ஆனுல் தொடர்ச் சியான குழந்தைப் பேற்றினுல் அவர்கள் தேகசுகம்குன்றி நடைப் பிணமாக மற்றவர்களுக்கு சேவை செய்ய உயிர் வாழ்கிறுர் கள்

மேலே எடுத்துக்காட்டப்பட்ட பெண்ணின் அவல நிலையைப் போக்குவதற்கும் மனித சமுதா யத்தில் குறிப்பாக ஆண் வர்க் கத்தின் மனதில் பெண்களும் மனிதர்கள். அவர்களும் எம்மைப் போல் வாழ இன்பசுகங்களை அனு பவிக்க உரிமை உண்டு என்று ஒரு நாளை ஒதுக்கி மனிதனின் மனச் சாட்சியை எழுப்புகிறுர்கள்.

இந்த மகளிர் தினத்தில் மக் கள் மனதில் சமுதாயத்தில் தாயாக, மனைவியாக, பாட்டி யாக ஒரு பெண் வகிக்கும் உன் னத ஸ்தானத்தை எடுத்து விளக்குவார்கள். 'தொட்டிலை ஆட்டும் கை உலகை ஆளும் கை'' என்றும் ஒரு குடும்பத்தில் இல்லாளின் முக்கிய ஸ்தானத் தையும் எடுத்து உலக மக்களுக்கு விளக்க வேண்டும்.

சில நாடுகளில் பெண்களுக்கு கல்வி வழங்குவதில்லை. அவர் களுக்கு வாக்குரிமை இல்லை. ஆகவே அவர்கள் குரல்அரசுக்கு எட்டாது. அவர்களுக்கு மருத் துவ வசதியோ வேறு எந்த உரி மையோ இந்த நாடுகளில் இல்லை.

சில நாடுகளில் மதத்தின் பெய ரால் பெண்களை ஒதுக்கி வைக் கிறுர்கள். சில நாடுகளின் சனத் தொகை அதிகரித்திருப்பதனுல் ஆண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். அப்போது தான் பலரைக் கொண்ட ஒரு குடும்பத்தை பராமரிப்பான் என் றும் பெண்ணுக்கு வேலை கொடுத் தால் அது ஒரு தனி நபருக்கே உதவுகிறது என்றும் கூறுகிறுர் கள்.

எமது பண்பாட்டில் பெண் ணுக்கு ஒரு உயர்ந்த ஸ்தா னத்தை பண்டைக்காலம் தொட்டே வழங்கி வந்திருக்கி றுர்கள். ஆனுல் இடைக்காலத் தில் பெண்களை அடிமைகளைப் போல் பாவித்து வந்திருக்கிறு ர் கள்.

இலங்கையில் அன்னியர் ஆட்சி யாலும் கிறிஸ்த சமயம் பரவிய தாலும் பின் 1802-ம் ஆண்டளவில் புகுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வி முறையாலும் பெண்கள் முன்னேறி இருக்கிறார்கள். 1928ம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு இலங்கையில் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த வந்தபோது உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவிகள் இக்குழுவிற்கு சாட்சியமளித்து பெண்களுக்கு வாக்குரிமை கோரினார்கள். இதன் பயனாக 1931ம் ஆண்டு 21 வயதுள்ள ஆண், பெண் இருபாலாருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. இதனால் பல முன்னேற்ற சீர் திருத்தங்கள் 193 -1948 காலத்தில் இலங்கையில் நிகழ்ந்தன. ஆகவே மகளிர் தினத்தில் இலங்கையைப் பொறுத்த மட்டில் அவ்வளவு அடிப்படையான சாதனைகளைச் செய்யவேண்டியதில்லை.

ஆனாலும் இலங்கையிலும் சில துறைகளில் பெண்கள் பயனைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. இலங்கையில் கணிசமான அளவு பெண்பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது இருக்கிறார்கள் பொருளாதார காரணங்களால் இப்பிள்ளைகள் வசதியுள்ள செல்வந்தர் வீடுகளில் சிறு வயதிலேயே அவர்களின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும், சிற்றேவல்களைச் செய்வதற்கும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். மீன்வாடிகளில் சிறுகைத் தொழில்களில் நீதியான ஊதியம் வழங்காமல் இப்பிள்ளைகளை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு எட்டு மணித்தியாலவேலை என்ற நிர்ப்பந்தமோ அல்லது கிழமைகளில் ஒரிரு நாட்களில் விடுமுறை சலுகைகளோ, மருத்துவ வசதிகளோ கிடையாது. இவ்வாறான பிள்ளைகளுக்கு வேலையில் இருந்துகொண்டே அடிப்படைக் கல்வி பெறக்கூடிய வசதிகளை அரசாங்கம் றபடுத்திக் கொடுப்பது அவசியமாகும். உதாரணமாக தும்பறையில் பன்ன வேலைசெய்யும் சிறுபிள்ளைகள், பாவைத் தொழிற்சாலை, பற்றிக் துணி அச்சிடும் துறை, காரீயச் சுரங்கத்தில் வேலை செய்வோர் போன்றவர்களை தொழில் சம்பந்தமான கல்வியைப் பெறுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்தல் வேண்டும்.

குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களில் குடும்ப நலத்திட்டம், போசாக்குணவு, சுகாதார வாழ்க்கை, சுகாதாரக் கல்வி போன்ற துறைகளில், பெண்களுக்கு கல்வியூட்டுவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

பொருளாதார காரணத்தினால் கிராமத்திலிருந்து பெண்களை துர்மார்க்க தரகர்கள் கூட்டிச் சென்று விபச்சார விடுதிகளில் அவர்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்கிறார்கள். உல்லாசப் பிரயாணிகளுக்கு களிப்பூட்டுகிறோம் என்ற போர்வை

தொடர்ச்சி 7- ம் பக்கம்

# தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும் அபிவிருத்தியும்.

**1989**-ம் ஆண்டு முடிந்து *1990*-ம் ஆண்டும் பிறந்துவிட்டது. சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 17 வருடங்கள் முடிந்துவிட்டன. இந்தப் பதினேழு பதினெட்டு ஆண்டுகளில் இச்சங்கங்கள் அவற்றின் நோக்கங்களில் எந்த அளவில் அபிவிருத்தி அடைந்துள்ளன என்பது பற்றியும், அவற்றின் நோக்கங்களிலிருந்து பின்னடைந்தமைக்கான அடிப்படைக் காரணங்கள் சிலவற்றையும் ஆராய்ந்தால், எதிர்காலத்தில் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றின் மூலம் குறிக்கப்பட்ட இலக்கில் துரித முன்னேற்றம் எய்த வழிவகுக்கும் என்பதனை குறிப்பிடுதலே இக்கட்டுரை ஆய்வின் நோக்கமாகும்.

முடிந்துபோன பல வருடங்களிலும் இச்சங்கங்கள் போதிய அபிவிருத்தியினை அடையவில்லை என்பதனையும் தமது அங்கத்தவர்களுக்கு சமூக பொருளாதார தேவைகளைச் சரியான முறையில் பெரும்பாலும் நிறைவு செய்யவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதொரு உண்மையாகும். ஆனல் அபிவிருத்தி ஏற்படவில்லை என்பதனை மட்டும் நாம் வெறுமனே ஆராய்வதன் மூலம் எதிர் காலத்தில் இச்சங்கங்களைச் சீர் செய்துவிட முடியாது. இவை தமது இலக்கினை எய்தாமைக்குரிய அடிப்படைக் காரணங்களையும் ஆராய்தல் மூலமே எதிர்காலத்தில் இந்தச் சங்கங்கள் குறித்த நோக்கினை எய்தக்கூடிய திட்டங்களை உருவாக்க முடியும். இந்த அடிப்படையில் இவ் விடயத்தை நோக்குவோமாயின்,

---

ஆக்கம் :- கி.குணரத்தினம்.

தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்

மல்லாகம்.

---

அபிவிருத்தி என்பது; எந்த நோக்கத்துக்கு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கினை நிறைவு செய்வதேயாகும். இவ்வடிப்படையில் இந்நிறுவனமானது அதனை அமைத்தவர்களது சமூக பொருளாதார தேவைகளை நிறைவு செய்தல் என்பது பொருளாகிறது. உற்பத்தி சார்ந்த நிறுவனம் அதன் சாதனங்களை உச்ச இலக்கை நோக்கி நகர்த்தி அதன் மூலம் பெறும் உச்ச உற்பத்தி

மூலம் ஏற்படும் மிகையினைக் கொண்டு அமைப்பாளர்களது சமூக பொருளாதார தேவைகளை நிறைவு செய்தல் அபிவிருத்தி ஆகும். தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அதன் அமைப்பாளர்களாக சீவல்த்தொழிலாளர்கள் அமைகின்றார்கள். அவர்கள் அடிப்படையில் கல்வி, கலாச்சாரம், சமூகமேம்பாடு, பொருளாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் போதிய அளவில் நிறைவு செய்ய முடியாத வறுமை மட்ட வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இவற்றினைப் பூர்த்தி செய்யக் கூடிய திட்டங்களே அபிவிருத்தித் திட்டங்களாகும். இவற்றைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் தெ. ப பொ. உ. வி. கூ. சங்கங்கள் பாலர் கல்வித்திட்டங்கள், முதியோர் கல்வித்திட்டங்களையோ ஏனைய கல்வித் திட்டங்களையோ அமுல்படுத்தவில்லை இதற்கான திட்டங்கள் எதுவும் இதுவரை சங்கங்களில் இல்லை, போதிய, குடியிருப்பு வசதிகளின்றி (கொட்டில்கள்) குடிசைகளில் வாழும் சீவல்த் தொழிலாளர்கள் பயன்பெறத்தக்க வகையில் வீடமைப்புத் திட்டங்கள், அல்லது வீடுகளை அமைக்கக்கூடிய வகையிலான கடன் திட்டங்கள் எதனையும் சங்கங்கள் அமைத்துக்கொடுக்கவில்லை. இது போன்ற ஏனைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் இந்தச் சங்கங்கள் எந்தத் திட்டங்களையும் பெரும்பாலும் முன்வைக்கவில்லை. மறுபக்கத்தில் பார்ப்போமானால் பெரும்பான்மையான சங்கங்கள் தமது தொழிலின் எதிர் காலத்தைக் கருத்திற் கொண்டோ அதன் ஸ்திரத் தன்மையை பேணுவதற்கோ, அங்கத்தவர்களின் வருவாயைப் பெருக்குவதற்கோ ஏற்றவகையில் முதலீடுகளைச் செய்யவில்லை. சொந்தக் காணிகளையோ, சொந்தக் கட்டிடங்

---

5-ம்பக்கத் தொடர்ச்சி

யில் எங்களின் பண்பாடு இவ்வாறு அழிந்து செல்கிறது. இளம் பெண்பிள்ளைகளை இவ்வுல்லாசப் பிரயாணிகளுக்கு இசைவாக்கி பணம் அபகரிக்கிறார்கள். இதே சூழ்நிலையில் பலவித போதைப் பொருட்களும் இப்பெண்பிள்ளைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. விபச்சாரத்தையும் போதைப் பொருட்களின் உபயோகத்தையும் நிறுத்த வேண்டும்.

இலங்கையின் சனத்தொகையில் 45 வீதம் பெண்கள். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஜப்பான் நாட்டிற்கு அடுத்தாற்போல் பெண் வர்க்கம் சிறந்த நிலையில் இருக்கிறது என்று நாம் பெருமைப்படக் கூடியதாக இருந்த போதிலும் மேலே கூறப்பட்ட ஊழல்களை அகற்றினால் இலங்கையில் உள்ள பெண்கள் உன்னத நிலையை அடைவார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. பெண்குலத்திற்கு தீங்கு வருமாயின் அது நாட்டிற்கே தீங்காக விளையும்.

களையோ, பாரிய தொழிற் சாலைகளையோ அமைக்கவில்லை. இதற்கு புறநடையாக சில சங் கங்களை நாம் அவதானிக்கலாம். இவ்வகையில் அமைக்கப்பட்ட சில தொழிற்சாலைகள் கூட தனியே சங்கங்களின் முயற்சி யால் மட்டும் அமைக்கப்பட வில்லை. தற்போதும் இரவல் காணிகளையும், இரவல் கட்டிடங் களையும் கொண்டு பல சங்கங்கள் இருப்பதனை நாம் அவதானிக்க முடியும். இவற்றினை நாம் நோக் கும்போது இவை கடந்த காலங் களில் பாரிய அபிவிருத்தி எதனை யும் செய்யவில்லை என்பது புல னாகும்.

**அபிவிருத்தி இன்மைக்கான காரணங்கள் சில**

இவ்வாறான நிலைக்கு உரிய காரணிகளை நாம் நோக்குவோ மாயின், அபிவிருத்திக்குத் தேவையான மூலகாரணிகளின் மிகைகள் இங்கே ஏற்படுத்தப் படவில்லை. (அதாவது போதிய இலாபத்தை இச்சங்கங்கள் ஈட். டத் தவறிவிட்டன.) இதற்கான வேலைத்திட்டங்களைத் தயாரித்து அதனை அமுல்படுத்தி அதனை சரியான முறையில் கண் காணித்து போதிய இலாபத்தை ஈட்டவில்லை என்பதாகும். உச்ச உற்பத்தி, உச்ச இலாபம் என்ப தனை சங்கங்கள் எய்தவில்லை என்பதுடன் வீண்விரயம் கட்டுப் பாடற்ற செலவினம் என்பவை யும் அபிவிருத்திக்கு முட்டுக்கட் டையாக அமைந்த பாரிய கார ணிகள் எனலாம்.

**உற்பத்தித்துறையில் மிகை ஏற்படுத்தப்படாமைக்குரிய காரணிகள்**

**உறவு முறைத் தொடர்புகள்**

பெரும்பான்மையான சங்கங் களில் அங்கத்தவர்களின் உறவி னர்களே பணியாளர்களாக இருப்பதுடன் உச்ச முகாமைச் சபையில் இருப்பவர்களும் அங் கத்தவர்களாக இருப்பதும் போதிய கட்டுப்பாடுகளை ஏற் படுத்துதல் நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற விடயங்களில் தளம்பல் நிலையினை ஏற்படுத்து கின்றது. அத்துடன் எதிர்பார்க் கப்பட்ட இலக்கு எய்தப்படாத போது அவற்றிற்கான கார ணங்களைஆராய்ந்து நடவடிக்கை எடுத்தல் என்னும் செயற்பாடு உறுதியற்றதாகின்றது. இது அங் கத்தவர்கள், பணியாளர்கள் இரு சாராருக்கும் பொருந்துவதாக உள்ளது. அத்துடன் பொது நோக்குக்கும், பொது அபிலாசை களுக்கும் முக்கியம் கொடுப்பதை விடுத்து, தனி நோக்கங்களுக்கும் தனி அபிலாசைகளுக்கும் முக்கி யம் கொடுக்கும் நிலையே இங்கு உள்ளது. இதுவும் அபிவிருத் திக்கு தடைக்கல்லாகிறது இவ் வாறான உறவு முறைத்தொடர்பு கள் சங்கங்களின் முகாமைச் செயற்பாடு பலவற்றில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் சங்கங்கள் பாரிய நட்டங்களை அடைவதனை நாம் அவதானிக்க முடியும்.

### பொருத்தமான ஆளணி அமைக்கப்படாமை

பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும்போது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இது விடயத்தில் சங்க நலனைவிட தனியார் நலனே அதிகமாக பிரதிபலிக்கின்றது. பதவியில் இருக்கும் சில முகாமைச் சபை உறுப்பினர்களும் அதற்கு பொறுப்பானவர்களும் தம்முடன் ஒத்துப்போகக் கூடியவர்களையும், தமது அபிலாசைகளை வெளிப்படுத்தக்கூடியவரையும், பணிக்கு அமர்த்த முயலுதல்—குறிப்பாக ஒரு பதவிக்கு ஆளை எவ்வளவு பொருத்தமானவராக சேர்க்க முடியுமோ அதற்கு அமையவே அவரது உழைப்பையும் பெறமுடியும். இது விடயத்தில் பெரும் குறைபாடுகள் நிலவுகின்றன. இதற்கு விதிவிலக்கான சங்கங்களும் உண்டு. குறிப்பாக முகாமை மட்ட பதவிகள் வெற்றிடமாகும் போது அதற்கு அடுத்த நிலையில் இருப்பவர் தற்காலிகமாக அப்பதவிக்கு பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டு பின்னர் குறிப்பிட்டதொரு காலத்தில் இப்பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, நடைமுறை விதிகளுக்கு அமைய தகுதி வாய்ந்த ஒருவரை வெளியிலிருந்தோ அல்லது உள்ளேயிருந்தோ பணிக்கு அமர்த்துதல் பொருத்தமானதுடன் ஒழுங்கான நடைமுறையுமாகும். இதனால் திறமை, வேலை அனுபவம்' கல்வி அறிவு என்பவற்றை உரிய ஒருவரிடம் சரியான சேவையைப் பெறமுடியும். இது கூ. வே. ஆணைக் குழுச் சட்ட ஏற்பாடாகும். ஆனால் பல சங்கங்களில் இவ்வாறான செயல்நடை பெறுவதில்லை. தலைமைப்பொறுப்பில் இருப்பவரும் சபையும் தமது திறமையைக் காட்டி தமக்குச் சாதகமான ஒருவரை அவர் எந்தப்பதவி நிலையில் இருப்பினும் அப்பதவிக்கு பதில் கடமைக்கு அமர்த்திக்கொள்வார்கள். இதற்கு அவர்கள் கூறும் நியாயம் ''ஒரு நடத்தக்கூடிய ஆள் மட்டும்தான் தேவை, ஏனைய தராதரங்கள் முக்கியமானவை அல்ல'' ஓரளவு தராதரம் இருந்தால் போதும் என்பதே ஆகும். அவரைத் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தும்போது அவர் தமது பதவியை உறுதிபடுத்துமாறு கோருவார். நெடுநாளாக இக்கடமையைப் புரிந்துவருகின்றார், என்ற அடிப்படையில் அவர் அப்பதவியில் நிரந்தரமாக்கப்படுகின்றார். இது விடயத்தில் முகாமைச்சபை கூ. வே. ஆ. குழுச் சட்டங்கள் எதனையும் பேணுவதில்லை. இவ்வாறான பல சந்தர்ப்பங்களில் சட்டங்களைப் பேணுதலை உறுதிப்படுத்தவேண்டிய பல பகுதிகளும் செயலற்றுப் போவதும் உண்டு. இவ்வாறே பல வேறு பதவிகளுக்கும் பணிக்கும் ஆட்கள் சேர்க்கப்படுகின்றார்கள். இதன் மூலம் போதிய தகுதிகளைக் கொண்டிராதவர்கள்

பதவிகளை நிரப்பிவிடுகின்றார்கள். இதனால் இவர்களிடமிருந்து திறன்மிக்க வேலையைப் பெறுதல் பெரும்பாலும் முயற்கொம்பாகிவிடுகின்றது. இதனால் குறித்த பதவியின் பொறுப்பும் கடமையும் இயல்பாகவே செயலற்றதாகி விடுகின்றது. இதுவும் இச்சங்கங்களைப் பொறுத்தவரையில் ஓர் பாரிய குறைபாடாகும். குறிப்பாக முகாமை மட்ட உத்தியோகத்தர்களின் இவ்வாறான நியமனம் சங்கங்களுக்கு பாரிய இழப்பினைத் தருவது தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் இச்சங்கங்களைப் பொறுத்தவரையில் முகாமை மட்ட உத்தியோகத்தர்களின் செயல் திறன், திறமை, விசுவாசமான உழைப்பு என்பன இச்சங்கங்களிற்கு இன்றியமையாததாகின்றது. இச்சங்கங்களை வழி நடத்திச்செல்லப் போதிய முகாமைத்துவ அறிவினைக் கொண்ட முகாமைச்சபை இச்சங்கங்களில் அமைய முடியாமை இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

**உற்பத்தித் துறையில் விளைவுகள் சரியாக ஆராயப்படாமை பாதகமான விளைவுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை**

முகாமை ஒழுங்கின்படி உற்பத்தியானது திட்டமிடல் ஒழுங்குபடுத்துதல், கண்காணித்தல், கட்டுப்படுத்தல் என்ற ஒழுங்கில் அமைதல் வேண்டும். ஆனால் இவ்வாறான கடமைகள் சங்கங்களில் செயற்படுத்தப்படாமையுடன் விளைவுகள் ஒப்பீட்டு அடிப்படையிலோ உச்ச எதிர்பார்ப்புக் குறியுடனோ சீர்தூக்கிப் பார்க்கப்படுவதில்லை. அத்துடன் ஏற்படும் குறைவுகளுக்கு ஏற்ற நடவடிக்கையும் எடுக்கப்படுவதும் இல்லை.

ஒரு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அவ்விலக்கு எய்தப்படாத இடத்து அதற்கான காரணிகளை ஆராய்ந்து அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுதல் விளைவுகளைக் கூட்டுவதற்கு வழியாகும். இச் செயற்பாடு சங்கங்களில் நிகழ்வது குறைவு. உற்பத்தித்துறையைப்பொறுத்த வரையில் சங்கங்களுக்குச் சங்கம் நிலையங்களுக்கு நிலையம், பிரதேசங்களுக்குப்பிரதேசம் பாரிய வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. இவற்றிற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதன் மூலமே உச்ச இலக்கினை நாம் அடைய முடியும். அதன் மூலம் முறையான அபிவிருத்தியையும் அதன்வழியே உச்சலாபத்தையும் அடையமுடியும். இத்துறைகளில் வேண்டத்தகாத குறைவுகள் ஏற்பட்டு இருப்பது தெரிந்திருந்த போதிலும் கூட பலவிடயங்களில் இவைபற்றி பொதுச்சபைக்கோ வேறு உரிய இடங்களுக்கோ விரிவான முறையில் தெரியப்படுத்தப்படுவதில்லை. இதனால் உற்பத்தித்துறையில் போதிய முன்னேற்றம் ஏற்படுவது சாத்தியமற்றதொன்றாகும். அதுமட்டு

(தொடர்ச்சி 12-ம்பக்கம்பார்க்க)

— சிறுகதை —

# சாவின் நினைவு இருக்கட்டும்

**நிமலன்**

இவருடைய அழகிய இளம் மனைவி இப்படி அகாலமாக இறந்திருக்க வேண்டாம். இது மிகவும் கவலையான விசயம் தான்.

இவருக்காக-டாக்டர் மகேஸ்வரனுக்காக-அந்த ஆஸ்பத்திரி டாக்டர்களும், மற்றும் அங்குள்ள ஊழியர்களும் அதீதமான கண் காணிப்புகளையெல்லாம் விசுவாசமான முறையில் மேற்கொண்ட போதிலும் அவர்களால் அவளது உயிரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதற்காக- அந்தத் துர்ரதிஷ்டமான காரியத்திற்காக அவர்கள் மிகவும் வருத்தப் பட்டுக் கொண்டே-அச்செய்தியை டாக்டர் மகேஸ்வரனுக்கு அறிவித்தார்கள்.

ஆனால் டாக்டர் மகேஸ்வரன் அந்த வியாயகூலமான செய்தியைக் கேட்டு அப்படி. யொன்றும் திடுக்குற்றவராகவோ-துக்கித்துக் கொண்டவராகவோ தெரியவில்லை. தன்னுடைய ஒரு பேஷன்ற் தவறிவிட்டால் வருத்தப்பட்டுக் கொள்ளும் அளவு கூட தன் மனைவியின் பிரிவிற்காக இவர் கவலைப்பட்டுக் கொள்ளாதது மிக மிக ஆச்சரியம்தான்.

இவர் தன்னுடையதென்றும் பேத்துப் பிரித்துப் பார்க்காத பெருந்தகை. உயிர்கள், யாவும் ஒன்று' என்ற உயரிய கடவுள் நோக்கில் சிந்திக்கின்ருரோ?- அவ் வறிவித்தலைத் தந்த ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டு இவர் தனது டிஸ்பென்ஸரியில் அமைதியாகத்தனது தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

இவரது மனைவி இப்போது இறந்து கிடக்கும் இந்த ஆஸ்பத்திரியில் டாக்டர் மகேஸ்வரன் கடந்த ஏழு எட்டு வருஷங்களுக்கு முன்பு ஒரு டாக்டராக பணி புரிந்தவர். திடீரென்று ஒரு நாள் தனது டாக்டர் பதவியை ராஜினமாச் செய்துவிட்டு வெளியே வந்து விட்டார். திடுதிப்பென்று ஏன் இவர் இப்படிச் செய்தார்?......ஆஸ்ப்பத்திரி நிருவாகம் அதிர்ச்சி அடைந்ததுடன். அந்த இராசினமாவை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி எவ்வளவோ முயன்றும் இவர் அதற்கு இணங்கவே மறுத்து

விட்டார். அதைப்பற்றி-இவர் செய்துவிட்ட அத்திடீர் இராசினுமாவைப் பற்றி-இன்றளவும் யாருக்கும். எதுவுமே தெரியாத புதிராகவே இருக்கின்றது. ஆனுலும் இவரது அபார திறமையை மதித்து வரும் அங்குள்ள டாக்டர்கள் சில சமயங்களில் இவரை அணுகி இவரது ஆலோசனைகளைப் பெறுபவர்களாகவே இருந்தார்கள்.

ஆனுல் டாக்டர் மகேஸ்வரனின் இராசினுமாவைப்பற்றி பலரும் பல விதமாகப் பேசிக் கொண்டார்கள்.

முதல்நாள் அவர் எடுத்துக் கொண்ட ஒரு ஒப்பிரேஷன் கேஸ் தவறியதாலேயே அவர் இப்படித் திடீரென்று இராசினுமாச் செய்து விட்டாரென்றும்' இல்லை அவர் சொந்தமாக டிஸ்ப்பென்ஸரி வைத்துக் கொள்ளப் போகிருரென்றும் பேசிக் கொண்டார்கள்.

இவர் மனைவிக்கே தெரியாத இவ்விஷயத்தைப்பற்றி மற்றவர்கள் இப்படியெல்லாம் சிலாகித்துப் பேசிக் கொண்டதில் ஓர் உண்மை இருக்கவே செய்கிறது டாக்டர் மகேஸ்வரன் தனதாக டிஸ்பென்ஸரி யொன்றுவைத்துக்

---

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி ...)

மன்றி உற்பத்தித்துறையில் திட்டமிட்ட ரீதியில் ஏற்படுத்தப்படும் குறைவுகள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கூட விரிவாக ஆராயப்பட்டு உரிய தண்டனைகளோ, நடவடிக்கைகளோ முறையாக எடுக்கப்படுவதில்லை. சட்டம் நடைமுறை விதிகள் என்பன இங்கு செயலற்றுவிடுகின்றது. இவற்றினை ஆராய்ந்து இவற்றிற்கான காரணிகளையும், காரணகர்த்தாக்களையும் வெளிப்படுத்துவதன் மூலமும் அவர்கள் மீது போதிய நடவடிக்கை எடுப்பதன்மூலமும்தான் இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்திலும் ஏற்படாதிருக்க முடியும், இது விடயத்தில் நிர்வாகம் போதிய அக்கறை செலுத்துவது குறைவு. ஏதோ ஒருவகையில் இவை சரிக்கட்டப் பட்டுவிடுகின்றன தினைக்களம் இவ்வாருன விடயங்களில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து சட்டத்தின் ஆட்சியை வெளிப்படுத்துதல் அவசியமானதாகும். இல்லாதுவிடில் தொடர்ந்தும் இவ்வாருன பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

இவ்வாருன குறைபாடுகளை ஆராய்ந்து இவற்றினைத் தவிர்க்கவும் இல்லாமல் செய்யவும் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் தான் எதிர்காலத்திலேனும் இச்சங்கங்களை முறையாக இயக்க முடிவதுடன் அதிக இலாபத்தைப் பெற்று தொழிலாளர் வாழ்வில் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

கொண்டது என்னவோ உண்மை தான்.

ஆனால், 'பண ஆசைதான் மேலும் அவரை இப்படிச் செய்யத் தூண்டியது' என்றெல்லாம் பேசிக்கொண்டவர்கள் ஆச்சரியப் படும்படியாக இவர் ஏழை எளிய வர்களிடத்தில் 'பீஸ்' வாங்காமலே செய்யும் சேவையைப் பார்த்தவர்கள், தங்கள் எழுந்தமானக கதைகளுக்கு வெகுவாக அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

ஐந்து தலைமுறைகளுக்குப் போதக் கூடிய பணம் இவருக்குச் சீதனமாகக் கிடைத்த பணம் - அம்பாரமாகக் குவிந்து கிடக்கின்றது. இவர் சம்பாத்தியம் மாத்திரம் மிச்சப் பகுதியைக் காட்டவில்லையா என்ன? – இவைகளை இவர் எப்படி ஆடம்பரமான முறையில் செலவு செய்தாலும் இப்போதைக்கு முடிந்து போகக்கூடிய சொத்துக்களா அவை? ஆனாலும் டாக்டர் மகேஸ்வரன் ஒரு புரியாத - புரிய முடியாத மனிதரேதான்.

இவரை நாடி வைத்தியத்திற்கு வருபவர்களை இவர் 'பீஸ்' என்றே கேட்கமாட்டார். கொடுத்ததை – அதுவும் கொடுத்தால் வாங்கிக் கொள்வார். ஆனாலும் கொடுத்தவர், கொடுக்காதவர் என்ற பாகுபாடே காட்டாமல் எல்லோருக்கும் ஒரே முறையான சேவைதான். இவருடைய இப்படியான போக்கும் செயல்களும் மேல் தட்டுவர்க்கத்தில் இவரைப் பற்றிய ஒரு வித அருவருப்பையும், புத்தி சுவாதீனக்காரன் என்றெல்லாம் 'பகிடி'யும் பேசிக் கொள்வார்கள். ஆனாலும் இவருடைய சேவை மாத்திரம் தேவைப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அதற்கு அவர்கள் கூறும் காரணம்:- மிகவும் நல்ல கெட்டிக்காரனும் – கைராசிக்காரனும் என்பதே!

டாக்டர் மகேஸ்வரனின் திடீர் மாற்றங்களும் செயல்களும் அவரது புகழையும் பெயரையும் என்றென்றும் நினைவு படுத்துவனவாக நகரின் மத்தியில் அமைந்திருக்கும்.

**'டாக்டர் மகேஸ்வரன் பூங்கா'**

**'டாக்டர் மகேஸ்வரன் ஸ்ரேடியம்'**

என்பன எல்லாவற்றுக்கும் மேலாக ஏழை மக்களின் இதயங்களில் நிரந்தரமாகப் பதிந்து விட்ட இந்த மனிதனை அவர்கள் தங்கள் வணக்கத்துக்குரிய தெய்வமாகக் கருதுகிறார்களே!

ஓ! அது எவ்வளவு பெரிய தர்ம கைங்கரியம்! ஆனாலும் இவர் கதைப்பதையும், சிரிப்பதாகவும் கலகலப்பாக இல்லாமல் வெகுவெகு ஒறுப்பாக்கிக் கொண்டதால் இவரைக் காணும்போது ஒருவிதபயமே ஏற்படும். ஆனாலும் இவர் பயப்படும் படியான தோற்றமோ தன்மைகளோ அற்ற மனிதர்.

டாக்டர் மகேஸ்வரன் அமைதியான கடல். ஆர்ப்

பரித்து அடங்கி விட்ட கடல். அலைகளற்ற கடலில் பாய்த்தடுக்கில் வளர்த்தப்பட்ட பச்சைக் குழந்தையின் வாக்கல் நெளியும் நீர்த் திட்டுக்களாக இவர் முகத்தில் அடிக்கடி தோன்றி மறையும் உணர்ச்சி உதைகளின் அடியில்: ஆம், அது அதல பாதாளத்தின் ஆழம். ஆழ்கடலே தான்.

ஆழியின் மேற் பரப்பிலே தான் அலைக்குழந்தைகள் பிறக்க முடியும். ஆழந்தெரியாமல் அதற்குள் காலைவிட்டு அவஸ்தைப் படுபவர்களைப் போன்றுதான் டாக்டர் மகேஸ்வரனைப் பற்றிப் பேசிக் கொள்பவர்கள் நிலையும், உலகிலுள்ள அத்தனை பேருமே முத்துக்குளிப்பவர்களாக இருந்து விட்டால்...........

டாக்டர் மகேஸ்வரனும் சிரித்தும், கதைத்தும் கலகலப்பாக இருந்த காலமும் ஒன்றுண்டு. அது கடந்த எட்டு வருஷங்களுக்ளுக்கு முன்பு, சூளைக் கற்களாகி நீறிப் போய்விட்ட அந்தக் காலம்! ஆ! அது எவ்வளவு அற்புதமான காலம்.!

அதோ டாக்டர் மகேஸ்வரனின் டிஸ்ப்பென்ஸரியின் அருகிலுள்ள கடலின் அலைகள் அந்தக் கட்டத்தின் பின் பகுதியைத் தொட்டு மீளுகின்றன. மகேஸ்வரன் உள்ளே இருக்கிறார் அவரது கைகளில் புத்தகமொன்று இருக்கின்றது. அவரது ஐம்புலன்களும் அப்புத்தகத்திலேயே ஐக்கியப்பட்டுக்கிடக்கின்றதோ!

அது என்ன புத்தகமோ?

அவருடைய அழகிய இளம் மனைவி இறந்து கிடக்கும் இவ்வேளையிலா இவரால் இங்கிருந்து அமைதியாகப் புத்தகம் படிக்க முடிகின்றது? ஒழுகும் அவளது அழகு லாவண்யத்தை மொடேர்ண் ஆர்ட்டை கூர்ந்து பார்ப்பது போல் பார்த்துக் கண்டு பிடிக்க வேண்டிய அழகியா அவள்? விலை மதிப்பற்ற அந்த அழகு சொரூபத்தை யார் வேண்டுமானாலும் பார்த்தவுடனேயே ''அழகிதான் இவள்'' என்று அறுதியிட்டுச் சொல்லாவிட்டால் நிச்சயம் அவர்கள் அந்தகர்களாகத்தான் இருக்க முடியும்.

ஆனால் அந்த ஒப்பற்ற லாவண்ய சொரூபத்தின் அருகே கடந்த எட்டு வருஷங்களாக எப்பொழுதாகிலும் டாக்டர் மகேஸ்வரனையும் அவளையும் சேர்ந்தாற்போல் தம்பதி சமேதரராய்ப் பார்த்திருக்க முடியுமா?

வெளியில் மட்டுந்தான் அப்படியா? உள்ளே?

அது மிகவும் ஆச்சரியமான தாம்பத்திய வாழ்க்கையல்லவா அவர்களுக்குள் நிலவுகின்றது. வீதிக்கு வராத அவ்விவகாரம் அவர்கள் வாழும் மாடி வீட்டிற்குள்ளேயே அமுங்கிப் போய் விட்டதா?

எடுபிடி மனிதருடன் எல்லாம் சேர்ந்த சகல வசதிகளுடனும் அந்தப் பங்களா நிமிர்ந்து நின்ற போதிலும் டாக்டர் மகேஸ்வரனின் கலகலப்படங்கியதுபோல் அந்தப் பங்களா தனது சோபையை இழந்து மூழியாகிவிட்டது போலல்லவாபடுகின்றது.

கன்னிமாடக் காவல் அரண் வாக்கிலமைந்த உயர்ந்த சுற்று மதில் அதன் சென்னியில் கூர்பட உடைத்துச் செருகி நிறுத்தப்பட்டிருக்கும் பல வர்ணப் பிசுங்கான் ஓடுகள். அவைகள் இயற்றும் பயங்கரத் தவம். அவற்றிற்கும் அப்பால் உள்ளே அல்ஸேஷன் நாய்களின் ஆதாளி.

அதற்கும் அப்பால் என்ன நடக்கிறது என்பதே தெரியாத ஓர் உலகமும் மனிதர்களும்.

ஓ! அவர்கள்தான் எவ்வளவு கௌரவமான மனிதர்கள்!

டாக்டர் மகேஸ்வரன் தனது மனைவியின் முகத்தை-ஒரே வீட்டில் இருவரும் வசித்திருந்தபோதிலும் - இவர் அவளது முகத்தைப் பார்த்தே பல வருஷங்கள் ஆகிவிட்டனவென்றால் - ஏறத்தாழ இவர் அவளை மறந்து விட்ட நிலையிலுள்ள நிலையல்லவா? உண்மைதான்; இவரைப் பொறுத்தவரையில இவர் மனைவி இறந்து–இவரது நினைவை விட்டகன்று பல பல வருஷங்களாகி விட்டன. இப்பொழுது உலகத்திற்காக அவள் செத்து விட்ட இவ்வேளையில் ஏதோ பல வருஷங்களுக்கப்புறம் வந்திருக்கும் திதியின் நினைவாகவே இவர் கருதுகின்றார் போலும்!

பொறுமை கடலினும் பெரிது என்றால் டாக்டர் மகேஸ்வரன் உண்மையில் அக்கடலிலும் பெரியவராகத்தான் இருக்க வேண்டும். மனித வர்க்கத்தின் மன ஆழத்தை கடலுக்குச் சமதையாக உவமித்ததே இதனால்தான் போலும்!

டாக்டர் மகேஸ்வரன் எவ்வளவு கௌரவமான மனிதர். இவர் இச்சமூகத்தின் ஒழுங்கு நியதிகளுக்கமைய வாழ்ந்து, அதனால் அதன் நன்மதிப்புகளையெல்லாம் பெற்று அதன் முன்னணியில் இருக்கிறார் என்று போற்றும் இச்சமூகத்தின் ராட்சதப் போக்கிற்கேற்ப இசைவானவரா?

எந்த அளவிற்குத்தான் மறைக்க வேண்டியதை மறைத்துக் கொண்டதால்தான் தன்னை இச்சமூகத்தின் ஒரு மேம்பட்ட உயர்ந்த உன்னத ஸ்திதியில் ஏற்றி வைத்திருப்பதான மயக்கத்தில் கிறங்கி இருப்பவரா?

இவர் மேல் பலவந்தமாக இச்சமூகத்தால் ஏற்றி வைக்கப் பட்டிருக்கும் 'கௌரவமான' மனிதர்' என்ற கௌரவப் பட்டத்தை இவர் மனப்பூர்வமாக ஏற்பவரா? ஏற்றுக்கொண்டு விட்டாரா இவருக்கு அதைப் பற்றிய பிரக்ஞை பூர்வமான திருப்தியா?

அப்படியென்றால் இச்சமூகத் திற்கு - மூடி மறைத்துக் கௌரவ மனிதர்களாக வாழும் இச்சமூகதிற்கு-டாக்டர் மகேஸ் வரன் பின்னணியிலுள்ள சோகக் கதையின் வரலாறு ஒன்றும் புதி னமல்ல என்ற சகஜ நோக்கின் தார்ப்பரியமா?

இல்லையேல் 'டாக்டர் மகேஸ் வரன் பற்றற்ற துறவியா?

ஆனால் அதற்குரிய அருட் குறிகளோ, வேஷங்களோ அற்ற ஒரு துறவு நிலையா?

டாக்டர் மகேஸ்வரன் பக வத் கீதைக்குள் மூழ்கிக்கிடக்கின் றார். இந்தக் கௌரவமான மனி தர் தனது மன அமைதிக்காக அதைப்படிக்கின்றார். கடந்த பல வருஷங்களாக அதையேதான் அவர் படித்து வருகின்றார். புத் தகம் முழுவதும்-ஒரு வரி கூடத் தப்பாமல்-அவருக்கு நன்கு பாட மாகி விட்டது. ஆனாலும் இப் போதுதான் முதல் தடவை யாகப் படிப்பவர் போல் அவ்வ வளவு ஆர்த்மார்த்தமாக அதற் குள் புதைந்து கிடக்கின்றார்.

'' கர்மத்தின் பயனிலே பற் றுதலின்றித் தான் செய்ய வேண் டிய தொழிலை எவன் செய்கின் றானே அவனே துறவி. அவனே யோகி''

'மகேஸ்வரனாகிய நான் துற வியா? அவர் தன்னைத் தானே கேட்டுக் கொண்டார். '' புத்தி யில் தெளிவு பெற்றவன் விருப்பு வெறுப்பற்றவனாகி விடுகிறான்''

''நான் விருப்பு வெறுப்பற் றவனா?'

டாக்டர் மகேஸ்வரன் தனக் குள் தானே கேட்டுக்கொண் டார்

''புத்தியில் சார்பு எய்திய வன் கவலை நினைப்புக்களுக்கும், அவற்றுக்கனுசரணையான பாவ நினைப்புக்களுக்கும் இடந்தர மாட்டான்''

இவர் தன்னைத்தானே கேட் டுக் கொண்டார்.

விழிநீர் விரித்திருந்த புத் தகத்தில் விழுந்து சிதற. இவர் விரல்கள் பக்கங்களைப் புரட்டு கின்றன. இரண்டாம் அத்தியா யத்தின் சாங்கிய யோகப் பகுதி யின் பதினோராம் சுலோகத்தில் அவர் பார்வை நிலைக்கின்றது

'துயரப் படத்தகாதார் பொருட்டுத் துயரப்படுகின் றாய் ஞானவுரைகளும் உரைக் கின்றாய். இ ந்தார்க்கேனும் இருந்தார்க்கேனும் துயர் கொள்ளார் அறிஞர்'

டாக்டர் மகேஸ்வரன் தனது கைகளிலுள்ள பகவத் கீதையை மூடி மேசை மீது வைத்தார். கைகளைக் கோர்த்து நாடிக்கு உதைமானங் கொடுத்து கண் களை மூடிக் கொண்டார்.

மௌனத்தின் மோனத் தவத்தில் டாக்டர் மகேஸ்வரன் மூழ்கிப் போய்விட்டாரா?

அலைகளின் சென்னியில் பூலி நிசு நுரைகள் கொப்பளித்துச் சிறிப்பாய அகண்டமான வாய்ப் பிளவுகளைத் திறந்து பெருந் திமிங்கிலங்களாக ஓடி வரும் கடல் மடிப்புக்கள் இடி முழக்க ஓசையுடன் கரையில் மோதி மோதி மடிய,-புலனடக்க விஷயங்களில் நடைமுறையைக் கடைப்பிடித்து தேர்ச்சி பெருத வராயினும், மன மொடுக்கமென் பதைத் தனதடக்கமாக நிறுத் திய டாக்டர் மகேஸ்வரனிடத் தில் மற்றெல்லாம் சிறுக சிறுகத் தேய்ந்து ஒடுங்கி விட, ஒரு நிலைப் படுத்தப் பட்ட மனத்தினராய் ஒன்பது வருஷங்களுக்கு முந்திய சம்பவங்களை அசை போடுகின் முரா?

மத்திய வர்க்கத்தில் பிறந்த மகேஸ்வரன் சமூகத்தின் உயர்ந்த மட்டத்து மனிதனுக வேண்டுமென்று நினைத்ததில் தவறேதும் இருக்க முடியுமா?

கெட்டிக்காரன், சுட்டித்தன மான படிப்பாளி என்பதால் மட்டும் எல்லாம் ஒருசேர ஒரு வனுக்கு வந்து விடமுடியுமா? 'கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குத்தான்' என்பார்கள். மகேஸ்வரன் 'மெடிக்கல்' கல்லூ ரியில் இருக்கும்போதே பொரு ளாதார விஷயம் அவர் படிப்பிற் குத் துணைபுரிய மறுத்தது. சாதா ரண சுருட்டுத் தொழிலாளி யான தனது தந்தை படும் பாட்டை நினைத்து வருந்திய மகேஸ்வரன் அந்த முடிவைத் தந்தையிடம் சொல்லத்தயங்கிய வாறு வெளியிட்டார்.

அதற்கு இவருடைய தந்தை சொல்கிருர்:-

''தம்பி, உயரப் பறக்க நினைப்பது தவறல்ல. ஆனல் ஆரு கட்டி விடும் செட்டையை நம்பிப் பறப்பதுதான் அபாயம். அதிலும் தன்முயற்சியால் உய ரத்தில் ஏறியவன் தற்செயலா கத் தவறி விழுந்தாலும், மறு படியும் அவனுல் அந்த இலக்கை அடைய முடியும். ஆனுல் மேலே உயரத்தில் தூக்கி இருத்தப்படு பவன் மாத்திர கீழே விழுந்து விட்டால் நிச்சயமாக அவன் திரும்ப ஏறவே மாட்டான்..,

அதிலும், பரம்பரைப்பணக் காரனை நம்பினுலும் பாதியில் திடுதிப்பென்று பணக்காரர்கள் ஆகியவர்களைப் போல் படு அயோக்கியர்கள் யாருமே இருக்க முடியாது. பணம் வந்து விட்டால் பத்தும் மறைந்து போய்விடும். இந்தக் காலத்திலே குலம் கோத்திரம் பாராமல், அவர்களுடைய வரலாறு தெரி யாமல் வெறும் பணத்திற்காக மட்டும் இந்தக் காரியத்தைச் செய்வது எனக்கென்னவோ நல் லதாகப் படவில்லை ... ... ... ...

வாழ்க்கையென்பது வெறும் குழந்தைப்பிள்ளை விளையாட்டுத் தன்மன மண் சோறுகறி விளை யாட்டல்ல. கலியாணமென்பது கண்ணன் பள்ளி கொள்ளும் ஆலமரம் போன்றது. அதனுல் தான் ''கல்யாணம் ஆயிரம்

காலத்துப் பயிர்'' என்று எங்கள் முன்னோர் சொல்லி வைத்திருக்க வேண்டும். ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி நீடூழி வாழ்க' என்ற வாழ்த்து எதைக் குறிக்கிறதென்று நினைக்கிறாய்?.. எதுவோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லி விட்டேன். தம்பி பின்னால் என்னை மாத்திரம் நொந்து கொள்ளாதே'' என்றெல்லாம் நீண்ட அறிவுரைகளைச் சொல்லி நிறுத்தினார் மகேஸ்வரனின் தந்தை.

'' காலந்தெரியாத பேச்சு: கனகாலத்திற்கு முந்திப் பேசியிருக்க வேண்டிய பத்தாம் பசளிப் பேச்சு'' இது மகேஸ்வரனின் நினைப்பு. ஆனால் தந்தையிடம் இப்படிப் பேசமுடியுமா? ஒருவித மான பவ்வியத்துடன், கால மாற்றங்களையும், கடைசியில் மிஞ்சப்போகும் உலோகாயுத விஷயங்களையும் பற்றி தனது நவீன கல்வி முறையின் நாவன்மையால் தந்தையை வசப்படுத்தி எடுத்துக் கொள்கிறார் மகேஸ்வரன். வாழ்க்கையின் முன்னேற்ற மொன்றையே குறிக்கோளாக நிறுத்தி எப்படியாவது அடித்துப் புரண்டு எழுந்து சமூகத்தின் முன்னணியில் வந்து பெரிய மனிதராகிவிடவேண்டுமென்ற தார்ப்பரியத்தில், சீதனப் பணத்தின் மூலம் வெளிநாடுவரை சென்று பலவித பட்டங்களைப் பெற்ற பின்பு மிக நேர்த்தியான நிபுணராகவே நாடு திரும்புகிறார்.

அரசாங்க ஆஸ்பத்திரியில் டாக்டர் மகேஸ்வரன் சேர்ஜனாக நியமிக்கப்பட்டுவிட்டார். ஆயிரக் கணக்கில் சம்பளம். அழகான மனைவி, பங்களா, காரும் கார்ச் சாரதியும், பெருந்தட்டில் பிரபல்யமான பெயரும் புகழும் இவர் அதிஷ்டத்தைப் புகழாதவர்களே கிடையாது.

கல்வித்துறையில் டாக்டர் மகேஸ்வரன் அடைந்த மகத்தான முன்னேற்றம் அபாரமானதுதான். இவரைப் போன்ற நிபுணர்கள் இங்கு வெகு சிலரே தான். ஆனால் கல்வியும் தொழிலும்தான் ஒரு மனிதனுடைய முழு முன்னேற்றமும் என்று சொல்லமுடியுமா?

எவளுடைய பணத்தின் மூலம் மகேஸ்வரன் இத்தனை முன்னேற்றங்களையும் பெற்றுச் சமூகத்தின் முன்னணியில் நிற்க வேண்டுமென்று கங்கணங்கட்டி முனைந்து நின்று பெற்றாரோ — அதே அவளால் இவர் சமூகத்தின் பின்னணியில் கூட நிற்க முடியாதவாறு அவமானப் படுவதாக இருந்தால் .........

ஐந்து வினாடிகள் கூட சௌசன்னிய உறவில் நிலைத்து நிற்க முடியாத பல பயித்தியக்காரர்களால் ஐம்பது வருஷங்கள் கூட நிலை பெற்றுவிடுகிறதென்றால் மேல் தட்டுவர்க்கத்தில் இவை சர்வ சாதாரண சகஜம்தான் போலும்.

மேல் தட்டு வர்க்கத்தில் சகஜமாகிவிட்ட இந்த அருவருக்கத் தக்க செயல்களிலிருந்து டாக்டர் மகேஸ்ரன் விதிவிலக்கானவரா?

ஒருநாள் டாக்டர் மகேஸ்வரனை இவருடைய கார் வந்து அழைத்துப்போவதற்கு முன்னுடியே வீடு வந்து சேருகின்றூர்.

கார் வீட்டின் போட்டிக்கோ வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

'ட்றைவர் எங்கே?'

டாக்டர் மகேஸ்வரன் வீட்டினுள்ளே செல்கின்றூர்.

படுக்கை அறை இவர் கண்களில் படுகின்றது. அதை அண்மித்த போது .........?

மகேஸ்வரனின் குருதி உறைந்து இறுகிவிட, குரல்வளேக்குள் ஒலி அடைபட்டுவிட நாக்குப் புரளாமல் அண்ணத்தில் ஒட்டிவிட, நிலேகுத்தி நின்ற விழிகளுடன் அசைவற்று நின்றநிலே நின்றபடியே செத்துவிட்டாரா?

திடீரென்று நினேவு பெற்று ஏதோ நினேத்துக் கொண்டவராக வந்த சுவடே தெரியாமல் விறுவிறென்று வெளியே சென்றுவிட்டார் மகேஸ்வரன்.

இவர் அவள் முகத்தைப் பார்த்தே பல வருஷங்களாகிவிட்டன. அதாவது இவரைப் பொறுத்தவரையில் அன்றே செத்து மடிந்து இவரது நினேவையும் விட்டகன்று விட்டதான நிலே.

டாக்டர் மகேஸ்வரன் எவ்வளவு கௌரவமான மனிதர். இவரை இச்சமூகம் எவ்வளவு தூரத்திற்கு மதிப்பு வைத்துப் போற்றுகின்றது.

பருவ மாற்றங்களின் பல வித தாக்கங்களால் இழுத்த லேக்கழிக்கப்படும் அக்கடல் டாக்டர் மகேஸ்வரனுக்கு ஈடிணேயாக இருக்க முடியுமா?

ஈமச்சடங்குகள் யாவும் முடிந்துவிட்டன. எல்லோரும் மெல்ல மெல்லக் கலேந்து போய் விட்டார்கள். அழுது கொண்டு நிற்கும் ட்றைவர் சிங்காரம் இவர் கண்ணில் படுகின்றுன்.

இவர் அவனே அழைத்தார்.

'சிங்காரம், இன்றுடன் இங்கு உன்வேலே முடிந்துவிட்டது. நீ உடனே இங்கிருந்து போய் விடு.''

''ஆம்! இவர் கடலினும் பெரியவரே!

உள்ளும், புறமும் உலகத்தில் என்னென்னவோ எவ்வளவோ நடக்கின்றன. பெய்யாப் பெருமழை பெய்து விட்டால் குளங் குட்டைகள் தான் உடைப்பெடுத்து ஊரறியச் செய்து விடுகின்றன. ஆனுல் கடல் - அது ஊழிக் கூத்தாடுகின்றதே தவிர உடைப்பதில்லேயே

ஆம்! கீதைநிழலில் வாழும் டாக்டர் மகேஸ்வரன் அக்கடலினும் பெரியவரே!

(முற்றும்)

# தெ.ப.பொ. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்

# சமூகப் பற்றுடன் செயற்பட வேண்டும்!

**ஊழியர் மத்தியில் உதவிஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் பேச்சு.**

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் 19 ஆவது ஆண்டு கால தோற்றத்தையும்— வளர்ச்சிப்பாதையையும் பார்க்கும் போது இன்றும் இச் சங்கங்கள் பூரண வளர்ச்சியை அடையவில்லையென்றே சொல்ல வேண்டும். இதற்கு இச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் அசிரத்தையும் — ஏனோ தானோ என்ற மனப் போக்கும் ஒரு காரணியாகும்.

14— 12— 89ல் கிளிநொச்சி தெ. ப பொ. கூ. சங்க ஊழியர் மத்தியில்உரையாற்றிய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு சபாரத்தினம் அவர்கள் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்து பேசுகையில், சமூக மேம்பாட்டுச் சங்கங்களாகிய இச்சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்கள் சமூகப்பற்றுடனும் — தியாக உணர்வுடனும் செயலாற்ற வேண்டும், அப்போது தான் இச்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்ட உண்மை நோக்கினை விரைந்தடைய முடியும்.

இச்சங்கங்களின் முதுகெலும்பான அங்கத்தவர்கள் கல்வியில் பின்தங்கியவர்களாக இருந்த போதிலும் அவர்கள் அனுப அறிவினால் சங்கங்களின் தலைமைத்துவத்தை ஏன்று வழிநடத்தும் திறமையைப்பெற்றுள்ளார்கள்என்றாலும் இவர்கள்கூட்டுறவு இலட்சணங்களையும், சட்டதிட்டங்களையும் தெரிந்திருத்தல் அவசியமாகும். அதற்கு சங்கங்களில் பணிபுரியும் அனுபவமிக்க ஊழியர்கள் மனம் வைத்தால் மேற் குறிப்பிட்ட கூட்டுறவுத்துறை சார்ந்த சகல துறைகளிலும் அவர்களைப் பக்குவப்படுத்த முடியும் இவ்வாறு செய்வதன்மூலம் எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த முன்னோடிகளாகத் திகழ்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

பணியாளர் நிர்வாகிகளுக்கிடையே ஆயிரம் பிரச்சினைகள் உண்டு. அவற்றை கூட்டுறவு நிறுவனங்களின் துணை கொண்டு தீர்த்துக் கொள்ளலாம். ஒருவருக்கொருவர் புரிந்துணர்வற்ற நிலையில் முரண்பட்டு நிற்பதால் இச்சங்கங்கள் மேலும் பின்தங்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

ஆகவே இந்நிறுவனங்களை சமூக பொருளாதார ரீதியாக

(தொடர்ச்சி 22-ம் பக்கம்)

தொடர் நவீனம்

# உண்மையில்லாத உறவுகள்

அத்தியாயம் → 12

கே. வி. என்.

கேட்டியோ அல்லி! கந்தையாவின்ரை இரண்டாவது பெடியன் குமாரசாமி...... குஞ்சரத்தின்ரை மனிசன்காரன், உனக்குத் தெரியுந்தானே. தங்கமான பிள்ளை. கந்தையாவுக்கு இரண்டு பெடியள்தானே. தகப்பன் கீறிய கோட்டை தாண்டாத வளர்ப்பு. குமாரசாமி அழகு சங்கையிலும் ஆம்பிளைக்கு ஆம்பிளை ஆசைப்படக்கூடிய தோற்றம். குணமும் அப்பிடி. எந்த மாசு மறுவும் சொல்லேலாது. இந்தக் காலத்திலும் பெடிபெட்டை இருக்கே அறுதலி பிள்ளையள். ஐந்து சதத்துக்கு உதவுமே. ஊதாரிப் பெடிபெட்டையள்ளை. அதையேன் விட்டுத் தள்ளு குப்பையிலை.

ஊம்....... ஏன் ஊருலகத்தை இழுக்க வேணும்? என்ரை இரத்தத் துளியிலை இருந்து வந்த வாரிசுகளே— ஏன் குமாரசாமி! அந்த நல்லவனுக்குப் பிறந்த பிள்ளைகளே அப்பிடி இருக்கையுக்கை மற்றது மறிச்சதுகளை ஏன் குறைபட்டுக்கொள்ள வேணும்? தன்னில் ஊத்தையை வைத்துக் கொண்டு பிறர் ஊத்தை மணப்பதாக சொல்லிக் கொள்ளுறது சரியில்லை கண்டியோ? என்ரை பேரப்பிள்ளையள் சேனுவதியையும், இராணியையும்தான் சொல்லுறன் சவங்கள். ஒரு சதத்திற்குதவாததுகள்.

கேளன் அல்லி! நான் என்ரை மருமகன் குமாரசாமியைப் பற்றி செல்ல வந்து வேறை எங்கையோ போய்விட்டன். குமாரசாமி மெத்த மரசாதியான ஒழுக்கசீலமான பிள்ளை. என்னைக்கும் என்னோடையோ தகப்பனிட்டையோ தலை நிமிர்ந்து கதைத்ததே கிடையாது.

குமாரசாமியின்ரை அந்த நடத்தைகளாலை தானே அவருக்கு அந்தப் பெரிய தொகையான சீதனபாதனத்தைக் குடுத்தனான். எங்களுக்கு குஞ்சரம் ஒரே ஒரு பிள்ளைதானே எல்லாவற்றையும் அவளுக்கே அள்ளிக் குடுத்திட்டன்.

கலியாணக் காட்சியைக் கண்டு ஊரே ஒருக்கால் கெம்பிச்சுது கண்டியோ. சப்பறமென்ன? சோடனைகளென்ன? வெறும் பொயிலை வியாபாரி மாப்பிள்ளைக்கு இவ்வளவு பெரிய தடபுடலா கலியாணமும் சீதன

பாதனமும் என்று ஊர் ஊராக அதிசயப்பட்டவர்கள் · ஆத்திரப் பட்டவர்கள். இப்படி எத்தனை எத்தனையோ ஆத்திரமும் அவா வும் பட்டார்கள் தெரியுமா அல்லி!

ஆனால் இந்த மனித சாதியின் நாவும் கண்ணும் இருக் குதே பார்த்த இடமும் ஏம் பச்ச இடமும் அப்பிடியே பத்தி யெரிஞ்சு போய்விடும். அப்பிடித் தான் என்ரை குடும்பமும் பத்து வருசத்துக்கிடையிலை எல்லாம் பத்தியெரிஞ்சு பாழ்பட்டுப் போச்சு. மருமோன் குமாரசாமி யின் ஆயுள் குறுகியதாகப்போய் விட்டுது. குஞ்சரம் குடுத்து வைத்தது அவ்வளவுதான்

குமாரசாமியின் மறைவுடன் குஞ்சரமும் படுத்தபடுக்கையாகி விட்டாள். என்னென்னவோ வைத்திய மெல்லாம் செய்து பார்த்தாயிற்று. மனவருத்திற்கு மருந்தேது? ஊணுறக்கமின்றி உருக்குலைந்த நிலையில் குஞ்சரம் எண்ணி ஆறுவது மாதம் ஓ...... ஆ, கடவுளே! அவளும் போய் விட்டாள்.

அல்லி ஏன் அழுகிறன் என்று பார்க்கிறியா? அழாமல் என்ன செய்வன்? அந்தக் காலமோ இந்த நேரம்வரை அழுது கொண் டேதானிருக்கிறன். ஆனால் அறுத்த சீவன் மட்டும் என்னை விட்டுப் போக மாட்டன் என்று கிடக்குது.

குஞ்சரமும், குமாரசாமியும் இடைக்கொள்ளையாகப் போய் விட்டார்கள். அன்னப்பிள்ளை இருந்த இருந்தாற்போலை ஓ! ... என்று அழுவாள் சிரிப்பாள். மண்ணில் உருண்டு புரழுவான், தலையை சுவரில் பேரட்டு இரத்தம் பீறிட்டு வர அடிப்பாள். அவள் பைத்தியக்காரி ஆகிவிட்டாள். இந்த இரண்டு குஞ்சுகளையும் — இராணியையும்,சேனுவதியையும் காப்பாற்றுவதே பெரும்பாடா யிற்று.

சாகவேண்டிய வயது வந்த நாங்கள் சகாமல், சாகக்கூடாத வாழவேண்டிய வயதில் மாண்டு மடிந்துபோய்விட்டுதுகள் நானும் அன்னப்பிள்ளையும் நாளாந்தம் சாகாமல் செத்துக்கொண்டிரு தோம். எல்லாம் இந்தக் குஞ்சு களுக்காக – பேரப்பிள்ளைகள், இராணியும், சேனுவதிக்குமாக இந்த சீவன்களை வலுவில் இழுத் துப் பிடித்து நிறுத்த வேண்டிய தாயிற்று.

(தொடர்ச்சி 24 -ம் பக்கம்)

---

20–ம் பக்கத் தொடர்ச்சி......

அபிவிருத்தி செய்து தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும்வகை யில் செலாற்ற வேண்டும்.

இதனை ஓர் உறுதி மொழியாக– சத்தியப்பிரமானமாக எதிர்வரும் ஆண்டிலிருந்து எடுத்துக்கொண்டு செயல்படுங்கள் என்பதே எனது வேண்டுகோளாகும்.

# கற்பக தருவும், பூவரசும் எமது அருமந்த செல்வங்கள். இவற்றை அழிப்பதால் ஏற்படும் அனர்த்தங்கள்.

— ரஞ்சி.

பனையும் பூவரசும் நிறைந்து செழித்து வளர்ந்து பசுமை மகொழித்துக் கிடந்த யாழ்ப்பாணக்குடாநாடு இன்று இவ்விரு மரங்களையும் வகை தொகையின்றி அழிப்பதால் பசுமைப் போர்வை அற்று வரும் அவலமான நிலைமை வேதனை தருவதாகும்.

இப்பிரதேசத்தின் உணவுத் தேவை முதல் கைத் தொழில் மூலப்பொருள் தேவை வரை பூர்த்தி செய்த பெருமை பனைக்கும் பூவரசுக்கும் உண்டு. இந்த மரங்களின் இலைகள் இப் பிரதேசப் பயிர்ச்செய்கையின் பசுந்தழை உரமாகப் பாவிக்கப் பட்டு வரப்பட்டவை. கால் நடைகளின் உணவாகவும் இருந் தவையே. வீதியின் நிழல் மரங் களாகப் பூவரசுகளே குடாநாட் டின் சிறுதீவுப்பகுதிகளில் நிழல் தருகின்றன. கடலோரங்களில் மண்ணரிப்பைத் தடுக்க பயன் படுகின்றது.

பூவரசு இன்றும் நெடுந்தீவி லும் நயினா தீவிலும் பசுமை யாக உள்ளன. குடாநாட்டின் உவர் நிலப் பாங்கான பகுதிக ளில் வேலிக் கதியால்களாகக் காணப்படுகின்றன. இவ்விரு மரங்களும் கலட்டு நிலங்களி லும் கட்டாந்தரைகளிலும் அதிக மனித முயற்சிகளைப் பெறாது வளர்ந்து பயன் தரும் மரங்க ளாகும்.

மாட்டு வண்டில் சில்லுக ளுக்கும் இடியப்ப உரல் முதலி யனவின் உற்பத்திக்கும் பூவர சம் வைரங்களே மூலப்பொரு ளாகும். குடிசை வீடுகள், கால் நடைகளுக்கான கொட்டில்களுக் குத் தூணுகவும் கைமரங்களா கவும் பூவரசின் தண்டும் கொப் புகளும் பயன்படுவதை இன்றும் இப்பிரதேசத்தில் காணலாம்.

நமது பிரதேசத்தின் குன் றுத மரவளங்களான பனைகளும் பூவரசுகளும் வகை தொகை இன்றி, எதிர்கால விளைவுகளைச் சிந்தியாது வெட்டி எடுக்கப்படு கின்றமை பிரதேச மூலவள அழிப்பாகும். இன்றைய தலை முறையினராகிய நாம் இவற் றினை அழிக்கும் அதே வேளை யில் பயிரிடும் மாற்று நடவடிக் கையில் ஈடுபடுவதில்லை. இது ஒரு பெரும் பாதகமான எதிர் கால விளைவுக்கு வித்திடும் செய லாகும்.

இப்பாதகமான செயலை முறைகேட்டினை தடுத்து நிறுத்த 'கிறீன் பீஸ்' - மூலம் நடவடிக்கை எடுத்து பாதுகாப்பதுடன் புதிதாக பயிரிடுதலையும் மேற்கொள்ளவேண்டும். இவ்விரு மரங்களும்-எமது பிரதேசச் செல்வங்கள். பல வழிகளாலும் பயன் உள்ளவை மட்டுமின்றி பிரதேச மண்வளமாக்கல், கால நிலை பேணல் ஆகியனவிலும் பங்கு கொள்ளுபவை.

மரங்களே உலகின் குன்றுத செல்வங்களாகும். அவை வளரக் கூடியவை. இனத்தைப் பெருக்கக்கூடியவை. மனித தேவைகளைப் பலவழிகளிலும் நிறைவு செய்பவை என்பது 'கிறீன்பீஸ்' அமைப்பின் சுலோகம், இதே வகையில்; பனையும் பூவரசும் எமது குன்றுத செல்வங்கள். அவை எங்கும் வளரக்கூடியவை. இனம் பெருக்குபவை. எமது தேவைகளை நிறைவு செய்வதே அவற்றின் பயன்கள்.

பனை 20 ஆண்டுகால எல்லையில் பதநீர், பனம் பழம் போன்றவைகளைத் தருமாயினும் அதன் பயன்படு காலம் வடலி நிலையில் இருந்தே ஆரம்பிக்கின்றது. இன்றும் வடமராட்சியில் வடலி அடைப்புக்கள் உள்ளன. இது நாற்புறமும் குமிழம், இலந்தை முட்களால் வேலி போட்டு பாதுகாக்கப்படுவதை இன்றும் காணலாம். வடலி ஓலை ஆடு, மாடுகளின் தற்காலிக உணவாகவும் வடலிச்சார்வு - குருத்தோலை பெட்டி, பாய், குட்டன் உற்பத்திக்கும் பயன்படுகிறது. கங்கு மட்டைகள் எரிபொருளாகின்றன. இன்று இதிலிருந்து பனந்தும்பு பெறப்பட்டு அந்நியச் செலவாணியைச் சம்பாதிக்க உதவுகின்றது.

---

21-ம் பக்கத் தொடர்ச்சி........

சாவிற்கு மூப்பிளமை இல்லை என்பதை சடுதியாக வந்து இளம் பராயத்து குருத்துக்களை அள்ளி வாயில் போட்டுக்கொண்டுபோய் விட்ட விதியின் கொடுமையை எண்ணி கத்திக்கத்தி அழுது கண்ணீர் விட முடிந்ததே தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை,

தாங்களாகவே சாவைத் தேடிக்கொள்ள நினைத்த வேளைகளிலெல்லாம் அதற்குச் சவலாக குறுக்கே நின்று வீரிட்டுக்கொண்டிருந்தார்கள். குழந்தைகளான இராணியும் சேனுவதியும்.

ஆ! இன்னொன்றையும் சொல்ல மறந்திட்டன் பார். குஞ்சரம் சேனுதிவதியைப் பெத்த கையுடன் செத்துப்போனதாலை அந்த நினைவாக கட்டுவிச்சதுதான் பிள்ளையார் கோயிலடியிலை ஆலமரத்துக்குக் கீழே கிடக்கிற சுமைதாங்கியும், தண்ணீர்த் தொட்டியும். அவள் நினைவை அவைபறை அறைவித்துக் கொண்டிருக்கும். ஆனல் அவள் சுமந்து தலைமாற்றி சுமத்தி விட்டுப்போன இந்த குஞ்சுகளை நானும் அன்னப்பிள்ளையும் சுமந்து சுமக்கும் சுமைதாங்கியானேம்.

(........வளரும்)

# தமிழ்ச்சாதி

வட வரணியூர் சி. சபா

தேறும் அழுக்ககற்றி
    தெருவெல்லாம் செப்பனிட்டு
ஏறும் பனைதென்னையை
    இயல்பாகப் பயன்படுத்தி
நாளும் துணிவெழுத்து
    நல்லழகாய் முடிவெட்டி
சோறும் கறியுமாக்கி
    சுதந்திரமாய் முரசுகொட்டி
வாழும் உரிமைகொண்ட
    ''உழைப்பாளர்'' வர்க்கங்கள்
நாறும் சமுதாயத்தை
    நலமாக்கும் ''சிற்பிகளை''
கேளும் இவர்களெல்லாம்
    ''கீழ்சாதி'' என்றொதுக்கி
ஆளும் பெருஞ்சாதியடா
    அதுதான்டா ''தமிழ்ச்சாதி''

# சங்கச் செய்திகள்

கட்டைவேலி உடுப்பிட்டி பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் (தெ. ப, பொ. உ. வி. கூ. சங்க) வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் நீண்ட இடைவெளிக்குப் பின்பு அண்மையில் சுமூகமாக நடைபெற்றது.

சங்க அமைப்பை சீர்குலைக்க விரும்பாத நலன் விரும்பிகளின் வற்புறுத்தலின் பேரில் வருடக் கணக்காக இழுபறிப்பட்ட மேற்படி கூட்டத்திற்கு பெருந் தொகையான அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

கூட்டுறவு ஆக்க உதவிஆணையாளர் திரு.ரி.சபாரத்தினம் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கும் தலைமை தாங்கி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை சங்கத் தலைவர் திரு.கி.சிவப்பிரகாசம் சங்கங்களின் சமாசபதில் பொது முகாமையாளர் திரு.கி. சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புதிய இயக்குனர்சபை உறுப்பினர்களது விபரம் பின்வருமாறு திரு.மு,குணரத்தினம் (தலைவர்) திரு.தே, அந்தோனிப்பிள்ளை (செயலாளர்) மற்றும் திருவாளர்கள் த.இராசதுரை த.தர்மராசா வெ.கந்தவனம் மு,இராசமூர்த்தி ந,காத்தியேசு,பொ. கிருஸ்ணன் க. செல்வராசா

---

### ஆற்றல் உரைகள்.

அன்பாக இரு: மனம் வளம் பெறும்.
ஆற்றலை வளர்த்துக்கொள்: தன்னம்பிக்கை ஏற்படும்.
இனிமையாகப் பேசு: நட்பு வளரும்.
ஈதலைக் கடைப்பிடி: பொதுநலம் பெருகும்.


---

## சம்பள உயர்வு

அதிகரித்தவாழ்க்கைச் செலவைச் சமாளிக்க அரசாங்கத்தினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சம்பள உயர்வு ரூபா 200/- தெங்கு பனம் பொ. கூட்டுறவுச் சங்கங்களும் மாசி மாதத்திலிருந்து (இம்மாதம்) வழங்க முன்வந்திருக்கின்றன,

அரியாலை, கோப்பாய், சாவகச்சேரி பருத்தித்துறை ஆகிய சங்கங்கள் தை மாத நிலுவையுடன் (அரியஸ்) மேற்படி சம்பள உயர்வை இம்மாதத்திலிருந்து வழங்க இருப்பதாகவும் காலம் தாமதியாது இவ்வாறு செய்வதால் ஊழியர்களது உற்சாகத்தைஇரட்டிப்பாகப்பெற்று மேலும் சங்கங்களை இலாபகரமாக இயங்க வைக்க முடியும் என்று மேற்படி சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் கற்பகத்திடம் தெரிவித்தார்கள்.

★

## காந்தி மணிவாக்கு

''என்னுடைய நண்பர்கள் என்னை உண்மையாகவே பெருமைப் படுத்தவேண்டுமென்று நினைப்பார்களேயானால் என்னுடைய திட்டங்களைத் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நிறைவேற்றிக் காட்டட்டும், அவற்றில் நம்பிக்கை இல்லையானால் என்னை முழு மூச்சுடன் எதிர்க்கட்டும்.''

உள்ளூர் உற்பத்திகளை வாங்கி உள்ளூர் வளத்தைப் பெருக்குவோம்

**பனம் உற்பத்திகள் நல்லாரோக்கியத்திற்கு உகந்தவை.**

**மில்க்வைற் மேலுறைகளிலிருந்து 100 திருக்குறள்** அனுப்பி கைத்தறி தயாரிப்பான கைக்குடையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**''மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

# கசிப்பை ஒழித்திடுவோம்.

**K. R. திருச்செல்வராசா.**

'கசிப்பை ஒழிப்போம்' என்ற அந்த செய்தியினை
விளம்பரமாய் பார்த்தவுடன்
அவ்வேளை நானடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவேயில்லை
ஒருவேளை உணவிற்கே தினம்தோறும் உழைத்திடுவான்
அவன் பெற்ற ஊதியத்தில் சரிபாதிப் பங்கினிலே
கசிப்பையே குடித்திடுவான் பாவியென்று
வசதியான வாழ்க்கையினை பெற்றவர்கள்
அருந்துவதோ மேல்நாட்டுக் குடிவகைகள்
அவர்களுக்கு மோட்டார் சயிக்கிளென்றும் காரென்றும்
ரீவி டெக்கென்றும் இவைகளுடன்
அனுபவிக்க இன்னும் பலவுண்டு
இவ்வரிய வாய்ப்பினையே பெற்றவர்கள்
இம்மண்ணில் சிலருண்டு
பிள்ளைகளோ இவர்களுக்கு கிடைப்பதுவும் ஓரிரண்டு
சாதாரணக் கூலிபெறும் நாளந்தத் தொழிலாளி
ஆட்கொல்லி என்கின்ற கசிப்பினையே குடித்திடுவான்
அவனுக்கோ இன்பமென்றால்
கசிப்பொன்று மனைவியொன்று
அவர்களுக்கோ பிள்ளைகளும் பலவுண்டு
நஞ்சிற்கு சமமான கசிப்பிற்கு
இரும்பென்றும் உரமென்றும்
பழுதடைந்த பழங்களென்றும்
சேர்வதென்ற செய்தியினை
நாமெல்லாம் தினம்தோறும் கேட்பதுண்டு
காலென்றும் அரையென்றும் முக்காலென்றும் குடித்துவிட்டு
நாலுகாலில் தவளுவதை
நாமெல்லாம் தினம் தோறும் பார்த்ததுண்டு
ஐந்துபிள்ளை பெற்றுவிட்டால் சோதனைதான்
ஆறுவதும் பெற்றுவிட்டால் வேதனைதான்

என்ற ஒருகூற்றை நாமெல்லாம் அறிந்ததுண்டு.
தான் மட்டும் இன்பத்தை அனுபவிக்கும் நோக்குடனே
கசிப்பையே தினம்தோறும் குடித்திடுவான்
அவனுடைய உள்ளுறுப்பு இயங்காத நிலையினிலே
சோர்ந்திடுவான் அருகிலுள்ள வைத்தியசாலையிலே
சில நிமிட சிகிச்சையின் பின்

டாக்டர்கள் கைவிரிக்க
அம்புலன்ஸ் வண்டியிலே பெரியாசுப்பத்திரிக்கு
கொண்டு செல்ல அங்கே
குளுக்கோசென்றும் இரத்தமென்றும் ஏற்றிடவே
மறுகணமே பிரிந்துவிடும் அவனுயிரும்
குடும்பத்தலைவனையே இழந்துவிட்ட நிலையினிலே
குடும்பங்கள் பல இங்கே
வீதிக்கு வந்துவிட்ட காட்சியினை
நாமிங்கே பார்த்ததுண்டு
உடலலுப்பு மனஅலைச்சல்
என்ற நிலை இருந்துவிட்டால்
ஒரு போத்தல் கள்ளருந்தி
உணவருந்தி தூங்கிவிட்டால்
நல்லதென்று பலர் கூற நாமிங்கே கேட்டதுண்டு
இக்கொடிய கசிப்பினையே இம்மண்ணில் ஒழித்திடுவோம்
எதிர்கால சந்ததியை வளம்படுத்திக் காட்டிடுவோம்
கூட்டுறவே நாட்டுயர்வு
என்ற அந்தப்பொன் மொழியை
செயல்படுத்தி காட்டிடுவோம்
என்று ஒரு சங்கமிங்கே
கசிப்பினை ஒழித்திடுவோம் என்று அந்த செய்தியிலே
தம்மை இனங்காட்டி வளர்ந்துவரும்
அக்கூட்டுறவுச்சங்கத்தை
மனமார வாழ்த்திடுவோம்

# நமக்கு வேண்டியது; மனோபாவ மாறுதல் !

நமது நாட்டில், மக்கள்மனோ பாவத்தில் ஒளியில்லை. ஏற்படும் ஒளியும் எளிதில் ஏற்படுவதில்லை.

ஏனெனில் காலங்காலமாக நம்மவர்கள் சில நம்பிக்கைகளில் ஊறிப்போயிருக்கிறார்கள் .........

இது ஏழைநாடு. என்ன பாடுபட்டாலும் இந்த நாட்டில் முன்னுக்கு வரவே முடியாது பணம்தான், பதவி, செல்வாக்கு தன்காரியம்சாதிக்கும் பதவி அதி காரத்தில் இருப்பவர்கள் என்ன தவறினை வேண்டுமானாலும் செய்யலாம் நாம் ஏன் எதிர்த் துப் பேசி வீண் வம்பில் மாட் டிக் கொள்வான்.

...இவ்வகையான எண்ணங் களில்-நம்பிக் கைகளில் ஊறித் திளைத்து வளர்ந்து உள்ள மக் கள் நியாயத்திலும் நேர்மையி லும் நியாயமான உழைப்பிலும் நீதியான வாழ்விலும் நம்பிக்கை இழந்தவர்களாகிறார்கள்.

நம்மில் இந்த நம்பிக்கை பரவலாக இருப்பது நமது எதிர்காலம் இருள் மயமானது

என்பதனை மனோதத்துவ நிபுணர் கள் ஆராய்ந்து கண்டுள்ளார்கள்

தனி மனிதனால் சமூகம் உருவாக்கப்படுவது எந்தளவு உண்மையோ அதேயளவு சமூ கத்தினால் தனி மனிதன் தன் வாழ்வை நேர் செய்து கொள் வதும் உண்மையாகும்.

மக்கள் மனோபாவத்தில் மாற்றம் அவசியம் என்பதனைப் புரிந்து கொள்ளும் தீர்க்க தரிச னம். தலைவர்களுக்குதேவை இது இல்லாத தலைவர்கள் நாளந்த நிர்வாகத்தைக் கவனித்து நாட் களையோட்டும் அன்றாடங் காய்ச் சித் தலைவர்களே.

எழுத்தாளர்' பத்திரிகையா ளர் பாடசாலை ஆசிரியர் பல்கலைக் கழகப் போதனையாளர்களுடைய பொறுப்பு இன்று ஏராளம்

எழுத்தாளர். பத்திரிகையாளர் திரும்பத் திரும்ப' இது நல்லது இது' தவறு' என்று எழுத எழுத மக்கள் மெதுவாக மாறுதலுக்கு உட்படுகிறார்கள் பணம் மட்டுமே குறிக்கோளாகவோ .மக்கள் இதையே விரும்புகிறார்கள்-அதை அளிப்பேன் என்று தொழிற் படுவோர் நாட்டுக்கு, சமூகத்துக் கு ஏன் வீட்டுக்கே தேவையில்

---

மனோதத்துவ எழுத்தாளர் சி, உதயமூர்த்தியின் மனோதத்துவ கட்டுரைகள் என்னும் நூலில் இருந்து தொகுத்துத் தருபவர்!

**கிறிந்தா**

லாதவர்களாகும் இவர்களும் அன்றுடங்காய்ச்சிகளே நாட்டுத் தலைவர்களுக்கு நாட்டின்மீது அக்கறை இருக்கவேண்டியது போல எழுத்தாளர், பத்திரிகை யாளருக்கும் இது எனது நாடு இவர்கள் என் மக்கள் என்னும் அதே ஈடுபாடு தேவை இந்த உணர்வுகள் அற்றபோது இவர் களும் வெறும் வர்த்தகர்களே!

பாடசாலை ஆசிரியர்கள் வெறுமனே சம்பளத்திற்கு வேலை செய்யும் மனிதர்களாக இருக்கக்கூடாது ஆனல் ஆசிரி யர்களும் மனிதர்கள்தான் அவர் கள். ஏற்றுள்ள தொழிற் கடமை நாட்டின் எதிர்காலத்தலைவிதியை முடிவுசெய்யும் பொறுப்புமிக்கது இதனல் ஆசிரியர்கள் சிறந்த சிருஷ்டிகர்த்தாக்களாக, ஆலோ சகர்களாக வழிகாட்டிகளாக விளங்குகின்றனர். இவர்களின் சொந்த வாழ்க்கை, வாழ்க்கை முறைகள் அவர்கள் புகட்டும் இலட்சியங்கள் கருத்துக்களின் குணங்களின் உருவமாகத் திகழ வேண்டும் அப்படி இல்லாதபோது குழந்தைகள் இளையோர் உள் ளத்தில் சொல்லொன்று செய லொன்று எனும் கபட வேட உலகமே கருத்தில் செயலில் பதி யும் மாணவர்களும் தங்களை அத் தகைய கபடவேட உலகிற்கே தயார்செய்து கொள்வார்கள்.

எழுத்தறிவித்தவன் இறை வன் ஆவான்'' என்று ஆசிரியர் களை உயர்த்தியுள்ளது நமது சமூ கம் சமூகப் பாராட்டுதலுக்கு தனியுரிமை உள்ள ஆசிரியர்கள் பொறுப்பினை உணர்ந்து செயல் படுவார்களாக.

பெற்றேர்கள் ,,என் மகனை நல்ல வேலையில் இழுத்துவிட வேண்டும்'' நல்ல சீதனம் வாங்கி விட வேண்டும் என்றும் என் மகளை நல்ல வேலையிலுள்ளவ னுக்கே கல்யாணம் செய்துவிட வேண்டும்' என்றும் கவலைப்படுகி ருர்களே ஒழிய நாங்கள் போன பின் மகன் மகள் தம்அறிவால் திற மையால் முன்னுக்கு வரவேண் டும். அதற்குத் தயார் செய் திருக்கிறேமா?,, என்று கவலைப் படுவதில்லை.

மகனையோ அல்லது மகளை யோ தன் காலில் நிற்க நமது பெற்றேர் வழி செய்வதில் அதி கம் கருத்து செலுத்துவது அரு கியே வந்துகொண்டிருக்கிறது

பிள்ளைகளுக்கு வாழ்க்கை பூராவும்வேண்டிய தன்நம்பிக்கை மனப்பலம் மனவளம் பற்றியே மேற்குலகப் பெற்றேர்கள் கவ லைப்படுகிருர்கள் இதையேவளர்க் கப் பாடசாலையிலும் வீட்டிலும் தளம் அமைத்துக் கொடுக்கிருர் கள் அதை வளர்க்கும் வாய்ப்புக் களை நிறையக் கொடுக்கிருர்கள்

நாம் வாழும் உலகு மகத் தான மாறுதல்களை பெற்றுக் கொண்டிருக்கிறது நாமும் அதை ஏற்றுக் அதற்கு ஈடுகொடுத்து வாழ்வதே நமக்கும் சமூகத்துக் கும் நல்லது இன்று நாம் வேண்டி நிற்பது மனேபாவ மாறுதல்

# ஆத்மீக உண்மைகள்

மழைநீர் மேட்டுப் பகுதியில் இருக்க முடியாது, பள்ளத்தை நோக்கி ஓடிவிடும். அதேபோன்று பெருமையும் அகங்காரமும் உடையவனிடம் இறைவனின் கருணை இருப்பதில்லை. பணிவாக இருப்பவரிடம்தான் இறைவனின் கருணை இருக்கும்.

ஒன்றை அறிந்தால் அனைத்தையும் அறிந்தவனாகிறாய். ஒன்று என்ற இலக்கத்தைப் போட்டு அத்துடன் சேர்க்கப்படுகின்ற பூஜ்யங்களுக்கு எல்லாம் நூறு ஆயிரம் என மதிப்பு அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒன்று என்னும் இலக்கத்தை நீக்கிவிட்டால் பிறகு பூஜ்யத்திற்கு மதிப்பில்லை. முதலில் இறைவன் என்ற ஒன்றை அறிந்து கொண்டால் உயிர், உலகம் இவற்றை அறிந்து கொண்டவனாகிறாய்.

இராமகிருஷ்ண பரமஹம்சர்


★ சஞ்சிகைகள்.........

★ புத்தகங்கள்........

★ மற்றும் பிரசுரங்கள்.........

யாவுக்கும் → உமா பிறிண்ட்டேர்ஸ்

32, நல்லூர் குறுக்கு வீதி,

நல்லூர் — யாழ்ப்பாணம்.

11

# பாம்போஷா




பனை அபிவிருத்திச் சபை தயாரித்து வழங்கும் தரமான சத்துணவு

## சகல கற்பகம் விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

**வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்**

தொடர்பு:-

தலைமை அலுவலகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 47, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.


உமா பிறிண்ட்டேர்ஸ், 32, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.